Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

3 Marks

1. (i) இந்திய விடுதலைக்குச் சில மாதங்களுக்குப் பின் (அக்டோபர் 1947) பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடினர்
(ii) காஷ்மீர் மகாராஜா ஹரிசிங்கால் அந்த நடவடிக்கையை தடுக்க முடியவில்லை.
(iii) காஷ்மீர் அரசருக்கு உதவுவதற்காக, இந்திய இராணுவம் அனுப்பப்படுவதற்கு முன் காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார்.
(iv) இதன் விளைவாக, காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதியானது.
2. (i) இந்திய அரசமைப்பு உலகிலேயே நீண்ட எழுதப்பட்ட அரசமைப்பு ஆகும்.
(ii) இந்தியா இறையாண்மையுள்ள, சமதர்ம, சமயசார்பற்ற, மக்களாட்சிக் குடியரசு என்று அரசமைப்பு முகவுரை கூறுகிறது.
(iii) அடிப்படை உரிமைகள், குறிக்கோள், தீர்மானத்தின் ஐந்தாம் பிரிவிலிருந்து உருவாக்கப்பட்டன.
(iv) இந்திய அரசமைப்பு இந்திய நாட்டிற்குச் சுதந்திரமான தேர்தல் ஆணையத்தை உருவாக்குகிறது.
(v) வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமையும் உறுதி செய்தது.
(vi) நீதித்துறையின் சுதந்திரத் தன்மையுடன் உறுதி செய்தது.
3. (i) இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அவற்றின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.
(ii) இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
(iii) ஒரு நாடு, மற்றொரு நாட்டின் உள்நிகழ்வுகளில் தலையிடாமல் இருக்கும்.
(iv) இரு நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.
(v) சமாதான வாழ்வாகும்.
4. **குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் :**
1.குத்தகையை முறைப்படுத்துவது.
2.குத்தகைக்காரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.
3.நிலவுடைமையார்களிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்து அவற்றிற்கான உரிமையை குத்தகைதாரர்களுக்கு அளிப்பது.
5. **விளைவுகள் :**
1.உணவு உற்பத்தி பெருகியது.
2.இரசாயன உரங்கள்,பூச்சிக்கொல்லி மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை வளர்ச்சி பெற்றது.
3.உபரி உணவு தானியங்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டு உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.
4.ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்தது.
5.இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டால் சூழலியல் பிரச்சனைகள் தோன்றியது.
6. 1.வேளாண்மையின் பின்தங்கிய நிலையை இரு காரணிகளோடு தொடர்புபடுத்தி பார்க்கலாம்.
2.ஒன்று நிறுவன அடிப்படையிலானது.
3.நிறுவனம் சார்ந்தது என்பது நிலவுடமை வர்க்கம்,விவசாயத் தொழிலாளர் வர்க்கத்திற்கு இடையே உள்ள சமூக பொருளாதார உறவுகளை குறிப்பது.
4.தொழில்நுட்பம் சார்ந்தது என்பது சிறந்த விதைகள்,டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றோடு தொடர்புடையது.

2 Marks

7. (i) இந்திய அரசாங்கச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான ஆவணம் ஆகும்.
(ii) இந்த ஆவணமே பிரிவினையின்போது இந்திய சுதேச அரசர்கள், இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.
(iii) காஷ்மீர், ஜூனாகாத், ஹைதராபாத் தவிர மற்ற சுதேச அரசுகள் அனைத்தும் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டு பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் தகவல் தொடர்பில் இந்தியாவின் மைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன.
8. (i) 1946 டிசம்பர் 9 ஆம் நாள் அரசியலமைப்புக்குழு தன் பணியைத் தொடங்கியது.
(ii) அரசியலமைப்புக் குழுவின் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
(iii) டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் அரசியலமைப்பு வரைக்குழுவின் நிரந்தர தலைவராக நியமிக்கப்பட்டார்.
(iv) 1949 நவம்பர் 26 ஆம் நாள் முதல் இந்திய அரசியலமைப்பை இச்சபை ஏற்றுக்கொண்டது.
(v) 1950 ஜனவரி 26 ஆம் நாள் முதல், அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
(vi) அது முதல் ஜனவரி 26 குடியரசு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது
9. (i) ஜம்மு காஷ்மீருக்காக சிறப்பு அந்தஸ்தை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 370வது உறுப்பு அளிக்கிறது.
(ii) இதன்படி ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு தனி அரசமைப்புச் சட்டம் உள்ளது.
(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்திலுள்ள பகுதி IV, IVA (அடிப்படை கடமைகள்) ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு பொருந்தாது.
(iv) ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் அனுமதி இல்லாமல் அந்த மாநில எல்லையை மாற்றும் அதிகாரம் மத்திய அரசுக்குக் கிடையாது.
10. (i) ஜே. வி. பி குழு மொழிவாரி மாகாணங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன என்று கூறியது.
(ii) மேலும் அது நாட்டின் மேம்பாட்டிற்கு "அச்சுறுத்தலாக" உருவாகக்கூடும் என்று தெரிவித்தது.
(iii) ஜே.வி.பி குழு "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று குறிப்பிட்டது.
(iv) மேலும் "நாட்டின் சாதகமான சூழ்நிலை உருவாகும் போது மக்களின் சிந்தனைகள் அமைதிப்படும்போது எல்லைகளை மாற்றி அமைத்து புதிய மாகாணங்களை உருவாக்கலாம் என்றும் ஜே. வி. பி குழு கூறியது.
11. 1.வறுமையின் அளவு மிக அதிகமாக இருந்தது.
2.ஆங்கிலேயர் ஆட்சியின்போது கைவினைத் தொழில்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கியதால் திறமைமிக்க கைவினைஞர்கள் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர்.

3.தனி நபரின் தலா வருமானம் குறைந்திருந்தது.
4.1947இல் இந்தியா விடுதலையடைந்தபோது நாட்டின் பொருளாதாரம் மிகவும் வலுவற்றதாகவும் பல பிரச்சனைகளையும் எதிர்கொண்டது.

12. **முக்கிய கடமைகள் :**
1.புதிய இந்திய அரசு பொருளாதாரத்தை வளர்த்தல்.
2.வேளாண்துறை நிலைமைகளை மேம்படுத்துதல்.
3.உற்பத்தி துறையை விரிவாக்கம் செய்தல்.
4.வேலை வாய்ப்புகளை பெருக்குதல் .
5.வறுமையைக் குறைத்தல் போன்றவை முக்கிய கடமைகளாக இருந்தன.

13. 1.ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது.
2.சுரண்டலை ஒழிப்பது.
3.செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை தடுப்பது ஆகியன சமதர்ம சமூக அமைப்பு ஆகும்.

14. 1.பெரும் நிலவுடைமையாளர்கள்,தங்களிடம் உபரியாக உள்ள நிலங்களைத் தாங்களாகவே முன் வந்து வழங்குவது பூமிதான இயக்கத்தின் நோக்கமாகும்.
2.வினோபா பாவே முதன் முறையாக தனது நிலத்தை அரசிடம் வழங்கியது மக்களின் கவனத்தை பெரிதும் கவர்ந்தது.

Multiple Choice Question

15. (b)

அ	ஆ	இ	ஈ
3	4	2	1

16. (b) i,ii,iii

17. (c)

அ	ஆ	இ	ஈ
4	3	2	1

18. (a) i, ii, iii, iv, v
19. (a) ஜனவரி 30, 1948
20. (a) பொட்டி ஸ்ரீராமுலு
21. (a) இராஜேந்திர பிரசாத்
22. (b) பம்பாய்
23. (a) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
24. (c) டிசம்பர் 9, 1946
25. (d) நவம்பர் 26, 1949
26. (c) ஆந்திரா
27. (a) வல்லபாய் பட்டேல்
28. (b) i, iii, ii
29. (b) சமதர்ம
30. (a) 1951
31. (c)

அ	ஆ	இ	ஈ
4	3	2	1

32. (b) 1972
33. (c) வினோபா பாவே
34. (a) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
35. (a) 1951
36. (a) 2005
37. (b) 1991
38. (c) 100
39. (c) 1945
40. (a) 5

QB365 QUESTION BANK 365 Study Material